**மயிலாடுதுறை கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்புக் கோட்ட செயற்பொறியாளர் அவர்களின் செயல்முறைஆணை**

**பிறப்பிப்பவர் : பொறிஞர்.அ.பாலரவிக்குமார், பி.இ.**
**செயற்பொறியாளர்,பொபது**

**செயல்முறை ஆணை எண். கோ.108-2 / 2024 /நிஎ1/ நாள்: 18.12.2024**

**பொருள் :** பணியமைப்பு (நேரடி) - **த்.நா.அ.ப.தொகுதி -** காலம் சென்ற ஊழியர் திரு.கோ.குப்புசாமி, உதவியாள் (மறைவு நாள்:14-02-2021) அவர்களின் மகன் திரு.கு.விஜயகாந்த், கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவியில் - பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் - தொடர்பாக

**பார்வை :**
1) அரசாணை எண்.18/தொ(ம) வே.க.யூ-1 நாள். 23-01-2020
2) அரசாணை (நிலை) எண்.33/தொழிலாளர் நலன் மற்றும் மேம்பாடு (Q1) துறை, நாள். 08-03-2023
3) அரசு இணைச்செயலாளர், பொ.ப.து., சென்னை அவர்களின் கடித எண். 2508/பணிII(1) / 2024-1/நாள் : 23-07-2024 மற்றும் கடித எண். 2508/பணிII(1) / 2024-2/நாள் : 23-07-2024
4) முதன்மைதலைமைப் பொறியாளர், (ம) தலைமைப்பொறியாளர், (பொது) பொ.ப.து., சேப்பாக்கம், சென்னை அவர்கள .செ.மு.ஆ. எண்.எஸ்.2(1)/011457/2023/நாள் : 30.11.2023.
5) தலைமைப்பொறியாளர் (கட்டடம்) பொ.ப.து., திருச்சி மண்டலம் மண்டலம், திருச்சி அவர்களின் செ.மு.ஆ.எண்.எஸ்.1(2)/ 6982 / 2023/நாள்: 11-12-2023.
6) கண்காணிப்புப்பொறியாளர், பொ.ப.து., கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம், திருவாரூர் அவர்களின் செ.மு.ஆ.எண்.1971/ 2023/ நி2/ நாள் : 13-12-2023.
7) இவ்வலுவலக செ.மு.ஆ.எண்.660/2023/நிஎ4/நாள் : 14-12-2023
8) தலைமைப்பொறியாளர் (கட்டடம்) பொ.ப.து., திருச்சி மண்டலம் மண்டலம், திருச்சி அவர்களின் செ.மு.ஆ.எண்.எஸ்.1(2)/ 6982 / 2023/நாள்: 11-12-2023.
9) கண்காணிப்புப்பொறியாளர், பொ.ப.து., கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம், திருவாரூர் அவர்களின் கடித.எண்.1642/ 2024/ நி2/ நாள் : 09-12-2024.

********

**ஆணை :**

பார்வை எண். 1 முதல் 8 வரை காணும் அரசாணை மற்றும் செயல்முறை ஆணைகளின் படி, காலஞ்சென்ற அரசு ஊழியர் திரு.கோ.குப்புசாமி, உதவியாள் (மறைவு நாள்:14-02-2021) அவர்களின் மகன் திரு.கு.விஜயகாந்த், கருணை அடிப்படையில் இக்கோட்ட அலுவலகத்தில் 14.12.2023 மு.ப முதல் இளநிலை உதவியாளராக பணிமேற்கொண்டு பணிபுரிந்து வருகிறார்.

அரசாணை (நிலை) எண். 33/தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை / நாள். 08.03.2023 -ன் படி தமிழ்நாடு குடிமைப்பணிகள் (கருணை அடிப்படையிலான பணிநியமனம்) விதிகள் 2023 பணியில் இருக்கும்போது மரணமடைந்தவர்/

Scanned with OKEN Scanner

மருத்துவ இயலாமையினால் பணி ஓய்வு பெறுபவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கு கருணை அடிப்படையிலான பணிநியமனம் வழங்குவது குறித்த ஒருமித்த ஆணை வெளியிடப்பட்டுள்ளது

மேற்கண்ட அரசாணையின் இணைப்பில் கண்ட பத்தி 16-ல் இந்த வகையான பணிநியமனம் வழங்கப்படுபவர்களுக்கு அப்பதவிக்குரிய நியமன அலுவலரே விதித்தளர்வு தேவைப்படாத இனங்களில் பணியேற்ற ஒரு வருட காலத்திற்குள் பணிவரன்முறை செய்து ஆணை வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

அரசு இணைச் செயலாளர், பொ.ப.து., சென்னை க.எண். 2508/பணி II (1)/2024-1/ நாள். 23.7.2024 மற்றும் அரசு இணைச் செயலாளர், பொ.ப.து., சென்னை க.எண். 2508/பணி II (1)/2024-2/ நாள். 23.7.2024 -ல் கடிதங்களில் 08.03.2023-க்கு பின்னர் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட / செய்யப்படும் தனியர்களின் பணியினை அவர்களின் விதிகளின்படி அனைத்து தகுதிகளையும் பெற்றிருப்பின் அவர்கள் பணியில் சேர்ந்த ஓராண்டிற்குள் நியமன அலுவலர் நிலையில் பணிவரன்முறை செய்யுமாறும், மேற்படி விதிகளில் விதி 17-ன் படி கல்வித்தகுதி (எந்த ஒரு பதவிக்கும் பணி நியமனத்திற்காக வரையறுக்கப்பட்டுள்ள கல்வித்தகுதி தளர்த்தக்கூடாது) தவிர மற்ற தகுதிகளுக்கு விதித்தளர்வு தேவைப்படும் பணிவரன்முறை கருத்துருக்களை மட்டும் அரசுக்கு அனுப்பி வைக்க கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

எனவே, காலஞ்சென்ற அரசு ஊழியர் திரு.கோ.குப்புசாமி, உதவியாள் (மறைவு நாள்:14-02-2021) அவர்களின் மகன் திரு.கு.விஜயகாந்த், கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக மேற்தெரிவித்த அரசாணைக்கு பிறகே 14-12-2023 முற்பகலில் பணியேற்றுள்ளார். திரு.கு.விஜயகாந்த் இளநிலை உதவியாளருக்கான கல்வித்தகுதி பெற்றுள்ளார். தனியரது வயது குறித்த விதித்தளர்வு கருத்துரு அரசுக்கு அனுப்ப வேண்டிய நிலை எழவில்லை. எனவே, தனியருக்கு அரசாணை 33/தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை/நாள். 08.03.2023-ல் வழங்கப்பட்டுள்ள ஆணைகளுக்கு ஏற்பவும், அரசாணை எண். 2151/பொ.ப.து./ நாள். 27.12.1988-ன் படியும் இளநிலை உதவியாளர் பதவிக்கான பணி நியமன அலுவலர் செயற்பொறியாளர் என்பதாலும்,

தனியர் தற்சமயம் இக்கோட்ட அலுவலகத்தில் பணிபுரிந்து வருவதால் அலுவலக தலைவரான செயற்பொறியாளரே விதித்தளர்வு ஏதும் தேவைப்படாத நிலையில் கருணை அடிப்படையிலான பணியினை வரன்முறை செய்து ஆணை வழங்கலாம் என பார்வை 8-மற்றும் 9-ல் காணும் தலைமைப்பொறியாளர், பொபது., திருச்சி மண்டலம், திருச்சி மற்றும் கண்காணிப்புப்பொறியாளர், திருவாரூர் அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Scanned with OKEN Scanner

எனவே, காலஞ்சென்ற அரசு ஊழியர் திரு.கோ.குப்புசாமி, உதவியாள் (மறைவு நாள்:14-02-2021) அவர்களின் மகன் திரு.கு.விஜயகாந்த், என்பவர் இளநிலை உதவியாளருக்கு தனியர் பணியேற்ற நாளான 14-12-2023 முற்பகல் இவர்மீது எவ்வித ஒழுங்கு நடவடிக்கைகள் மற்றும் குற்றச்சாட்டுகள் ஏதும் நிலுவையில் இல்லை என்பதால் அரசாணை எண். 2151/பொ.ப.து./ நாள். 27.12.1988-ன் படி திரு.கு.விஜயகாந்த், இளநிலை உதவியாளர் பணியில் சேர்ந்த நாளான 14-12-2023 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

செயற்பொறியாளர்,பொ.ப.து.,
கட்டட (க & ப) கோட்டம்,
மயிலாடுதுறை.

18/12/24

பெறுதல்,

திரு.கு.விஜயகாந்த்,
இளநிலை உதவியாளர்,பொ.ப.து.,
கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு
கோட்டம், மயிலாடுதுறை.

Scanned with OKEN Scanner